அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 227

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1983, ஒக்டோபர் மாதம் 31 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் ஆகிய யாவருக்கும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம்

---

18, ஆகஸ்ட் 1983 ஆம் தேதிய 222 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதனிடத்தில் பின்வருவதைப் பதிலிடு செய்க.

8. (அ) 1983 ஆகஸ்ட் 08ஆந் திகதிக்குப் பின் நியமனம் பெற்றவரும் இச்சுற்றறிக்கையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வகுதிகளில் எவற்றிற்குள்ளேனும் அமைந்து வருகின்றவருமான எவரேனும் ஒருவர் அத்தகைய பதவிக்கு நியமனம் பெற்ற ஒரு மாதத்துக்குள் அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் உள்ளவாறு உறுதியுரையை மொழிந்து கையொப்பமிடல் வேண்டும். அல்லது சத்தியஞ் செய்து கையொப்பமிடல் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஒருவர் அவரது நியமனத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குள் உறுதியுரையை மொழிந்து கையொப்பமிடவோ, சத்தியஞ் செய்து கையொப்பமிடவோ வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறும் ஒருவர் அதன் விளைவாக அத்தகைய பதவியை இழக்க அன்றிச் சேவையிலிருந்து நீங்க நேரிடும் என்றும் அவ்வாறான ஒரு ஏற்பாடு நியமனக் கடிதங்களில் உட்படுத்தப்படல் வேண்டும்.

(இ) அத்தகையவர்கள் உறுதியுரை மொழிந்து கையொப்பமிட்டு அல்லது சத்தியஞ் செய்து கையொப்பமிட்டு இருக்கும் பட்சத்தில் மேற்போந்த 6ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்தகையவர்கள் தமது நியமனத்திலிருந்து ஒரு மாத காலத்துள் உறுதியுரை மொழியவோ சத்தியஞ் செய்யவோ தவறியிருந்தால் மேற்போந்த 7ஆம் பந்தியில் உள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஈ) 222ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வகுதிகளின் எவற்றிற்குள்ளேனும் அமைந்து வருகின்ற ஒருவர் அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் உள்ள உறுதியுரையை அல்லது சத்தியத்தை மட்டும் மொழிந்து அல்லது செய்து கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஜ. ப. என். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.